Journal of Modern Tamil Research; Vol. 7, No. 3; 2019; Page:149-155.

ISSN: 2321-984X

Published by Raja Publications

---

# சோளப்பயிர்ச்செய்கையில் படைப்புழுக்கள் ஏற்படுத்திய பாதிப்புகள்: பாலமுனை விவசாய விஸ்தரிப்பு நிலையத்திற்குட்பட்ட விவசாய நிலங்களை மையப்படுத்திய ஆய்வு

**கலாநிதி எஸ்.எம். அய்யூப்,**

தலைவர், சமூகவியல் துறை

சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர்

கலை கலாசார பீடம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

0094769643899, மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பூச்சிகளாலும், விலங்குகளாலும் பயிர்களும் விளைச்சல்களும் அழிக்கப்படுவது விவசாயத்தில் ஒன்றும் புதிதல்ல. எனினும் படைப்புழுக்கள் விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் புதியவை. ஆபிரிக்காவையும் பின் இந்தியாவையும் தாக்கியழித்த படைப்புழுக்கள் இப்பொழுது இலங்கையையும் தாக்கி விவசாயிகளை கதிகலங்க செய்துவிட்டன. இவ்வாய்வு பாலமுனை விவசாய விஸ்தரிப்பு நிலயத்திற்குட்பட்ட ஒலுவில் 01, பாலமுனை, தீகவாபி போன்ற பிரதேசங்களில் படைப்புழுக்களால் சோளச்செய்கையில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆராய்கின்றது. முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் இரண்டையும் இவ்வாய்வு பயன்படுத்துகின்றது. தரவுகள் ஆய்வாளரால் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இதன்படி இப்பிரதேசத்தில் சோளச் செய்கையில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோனோரின் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதை இவ்வாய்வு கண்டுபிடித்துள்ளது. இப்பாதிப்புகள் அறுவடை செய்யப்பட்ட கதிர்களின் அளவைப் பாதித்துள்ளதோடு அவற்றின் தரத்தையும் பாதித்துள்ளன. இப்பாதிப்புகள் விவசாயிகள், வியாபாரிகள், நுகர்வோர் என மூன்று தரப்பினரையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றன. எனினும் விவசாயிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதனையும் ஆய்வு கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

## 01. அறிமுகம்


2016 களில் தொடக்கத்தில் ஆபிரிக்காவையும், 2018களில் நடுப்பகுதியில் இந்தியாவையும் சத்தமில்லாமல் ஒரு புழுப் படை தாக்கியழித்து, அங்கு காணப்பட்ட விவசாய நிலங்களை துவம்சம் செய்து, விவசாயிகளை வெறுங்கைகளோடு வீட்டுக்கு விரட்டியடித்தது. படைப் புழுக்கள் அல்லது சேனைப் பூச்சிகள் (fall army warms) என அழைக்கப்படும் இப்புழுப்படை அந்துவின் (month) குடம்பிப் பருவத்தையே (Larvae)

குறிக்கின்றது. இதன் விஞ்ஞானப் பெயர் ஸ்பொடொப்டெரா புருளிபெர்டா (Spodoptera Frugiperda) என அழைக்கப்படுகின்றது.

இப்புழுக்கள் முதன்முதலாக நைஜீரியாவில் 2016 களில்தான் கண்டறியப்பட்டது. பின் ஆபிரிக்காவின் 44 நாடுகளுக்கு இப்புழுக்கள் பரவின. 2018 மே மாதமளவில் தென் இந்தியாவுக்கு ஊடுருவின (விவசாயத் திணைக்களம், 2018).

இலங்கையில் 2018, ஒக்டோபர் மாதமளவில் அம்பாறை, அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இப்புழுக்களின் தாக்கத்தை அவதானிக்க முடிந்தன (பெரியசாமி, சீரங்கன் 2019). அமெரிக்காவின் வெப்ப மண்டல, மித வெப்ப மண்டல பகுதியை தாயகமாகக் கொண்டவைதான் இப்பூச்சியினங்கள் (கருப்பையா, ரமேஷ், 2018).

**வரைபடம் 01. படைப்புழுக்களின் வாழ்க்கை வட்டம்**




மூலம்: விவசாயத் திணைக்களம், 2018

### அ. முட்டை

விவசாய பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் இந்தப் படைப்புழுவின் வாழ்நாள் 30 நாட்கள் தான். தாய் அந்துப் பூச்சியாக இப்புழு மாறும் போது 500 முதல் 2000 முட்டைகள் வரை இருக்கின்றன. இதனால் சொற்ப நாட்களுக்குள் ஆயிரக்கணக்கில் இதன் தொகை பெருகி விடுகின்றன (கருப்பையா ரமேஷ், 2018). முட்டையிலிருந்த புழுக்கள் 03 முதல் 05 நாட்களுக்குள் வெளி வருகின்றன (பெரியசாமி, சீரங்கன், 2019).

### ஆ. குடம்பி

முட்டையிலிருந்து குடம்பிகள் அதாவது புழுக்கள் வெளிவருகின்றன. பயிர்களை துவம்சம் செய்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது இப்பருவமே ஆகும். 14 தொடக்கம் 21 நாட்கள் வரை இப்பருவம் நீடிக்கின்றது. முதலில் இப்புழுக்கள் இலைகளையே உண்ணத் தொடங்குகின்றன. இரவு வேளைகளில் இவற்றின் தீவிரம் அதிகமாக காணப்படும். பல புழுக்கள் காணப்படும் போது ஒன்றையொன்று தாக்கி ஒரு புழு மற்றப்புழுவை உண்டுவிடுவதால் கடைசியில் ஒரு செடியில் ஓரிரு புழுக்களே எஞ்சுகின்றன.

### இ. கூட்டுப்புழு

முதிர்ச்சியடைந்த புழுக்கள் (குடம்பிகள்) நிலத்தில் விழுந்து மண்ணுக்குள் நுழைந்து கூட்டுப்புழுப் பருவத்தைக் கழிக்கின்றன. மண்ணுக்குள் நுழைவது கடினமாகும் பட்சத்தில் அருகிலிருக்கும் இலைகுழைகளையும் இன்னும் பல பொருட்களையும் ஒன்று சேர்த்து அதனுள்ளே நுழைந்து இப்பருவத்தைக் கழிக்கின்றன. 07 – 13 நாட்கள் வரை இப்பருவம் நீடிக்கின்றது (பெரியசாமி, சீரங்கன், 2019).

### ஈ. நிறையுடலி அஞ்சல் பூச்சி

நிறையுடலி அஞ்சல் பூச்சியின் மொத்த ஆயுள் காலம் 10 தொடக்கம் 21 நாட்கள் வரைதான். நாளொன்றுக்கு 100 கிலோ மீற்றர் வரை பறக்கும் இவ்வந்துப் பூச்சி இரவில் சுறுசுறுப்புடன் இயங்குகின்றன.

## 02. ஆய்வு நோக்கம்

படைப்புழுக்களால் சேனைப்பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட சேதங்கள், விவசாயிகள், வியாபாரிகள், நுகர்வோர்கள் போன்றோரை எவ்வாறு பாதிக்கின்றன என்பதனை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 03. ஆய்வு முறையியல்

முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை இவ்வாய்வு பயன்படுத்துகின்றது. நோக்க மாதிரி அடிப்படையில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகள் 90 பேரிடம் வினாக்கொத்துகள் வழங்கப்பட்டு தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றோடு 10 நேர்காணல்கள் மூலமும் 03 இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் மூலமும், 04 விடயக்கலை ஆய்வு மூலமும் முதல் நிலைத் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. தரவுகள் ஆய்வாளரால் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**04. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட 14,597 ஹெக்டயர் சோளப் பயிர்செய்கையில் 9,105 ஹெக்டயர் செய்கை படைப்புழுவின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண விவசாய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது (தினகரன், 2019, ஜனவரி 28, ப. 17).

**அட்டவணை 01: படைப்புழுக்களினால் சோளச் செய்கை பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்**

| மாவட்டம் | பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட விவசாய நிலங்கள் (H) | பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் (H) |
|---|---|---|
| அம்பாறை | 12,850 | 9,035 (62.5%) |
| மட்டக்களப்பு | 967 | 476 (50%) |
| திருகோணமலை | 780 | 594 |
| **மொத்தம்** | **14,597** | **9,105** |

மூலம்: தினகரன், 2019, ஜனவரி 28

இந்த அட்டவணையின் அடிப்படையில் பார்க்கும் போது கிழக்கு மாகாணத்தில் உள்ள 03 மாவட்டங்களில் அம்பாறை மாவட்டமே படைப்புழுவின் தாக்கத்துக்கு அதிகளவில் உள்ளாகியிருக்கின்றது என்பதும் அம்பாறையின் மொத்த சேள உற்பத்தியில் 62.5 சதவீதமானவை படைப்புழுவின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதும் தெரியவருகின்றது.

அதேபோல் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், அம்பாறையில் 12,500 ஹெக்டயர் நிலத்தில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவற்றுள் சுமார் 75% மானவை படைப்புழுவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றார் (வீரகேசரி, 2019, ஜனவரி 28, ப. 17).

சோளச்செய்கையில் படைப்புழுக்கள் ஏற்படுத்திய தாக்கத்தினை மூன்று நிலைகளில் ஆய்வுப் பிரதேசத்தில் பார்க்கமுடியும்.

1. விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

11. வியாபாரிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

111. நுகர்வோருக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

**1. விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்**

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள ஒலுவில் 01(அஷ்ரப் நகர்), பாலமுனை, தீகவாபி ஆகிய கிராமங்களிலுள்ள 186 விவசாயிகளின் சோளப்பயிர்ச்செய்கை படைப்புழுக்களின் தாக்கத்தினால் பாதிப்படைந்துள்ளன. இப்பாதிப்புகள் குறித்து இம்மூன்று கிராமங்களுக்கும் பொறுப்பான விவசாயப் போதனாசிரியர் ஆர்.விஜயராகவன் பின்வருமாறு கூறுகின்றார்.

“எனது எல்லைக்குள் ஆலிம்சேனை (ஒலுவில்-01) பாலமுனை, தீகவாபி ஆகிய மூன்று கிராமங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இந்த மூன்று கிராமங்களிலும் பயிரிடப்பட்ட சோளமானது படைப்புழுக்களின் தாக்கத்திற்கு உட்பட்டுக் காணப்படுகின்றது. ஒலுவிலில் 90 ஏக்கர் சோளச் செய்கையும், பாலமுனையில் 62.5 ஏக்கர் சோளச் செய்கையும், தீகவாபியில் 75 ஏக்கர் சோளச் செய்கையும் படைப்புழுக்களினால் பாதிப்படைந்துள்ளன”. ஒரு ஏக்கரில் சுமார் 20,000 அடி சோளங்களை நடமுடியும். அவற்றில் சாதாரணமாக 12,000 அடிகள் கதிர்களைக் கொடுக்கும். இக்கதிர்கள் 07 ரூபாய் தொடக்கம் 10 ரூபாய் வரை விலை போகும். சாதாரணமாக 07 ரூபாயாக எடுத்துக்கொண்டால்கூட படைப்புழுவினால் ஏற்பட்ட சேதத்தை சுமார் 19 இலட்சமாகக் கணிக்கமுடியும்”.

**அட்டவணை 02: படைப்புழுக்களினால் சோளச்செய்கை பாதிக்கப்பட்ட கிராமங்கள்**

| கிராமம் | சேதமாக்கப்பட்டவை ஹெக்டேயரில் (HG) | சேதமாக்கப்பட்டவை ஏக்கரில் (AC) | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட சேதம் ரூபாயில் |
|---|---|---|---|---|
| ஒலுவில் - 01 (ஆலிம்சேனை) | 36 | 90 | 79 | 7,560,000 |
| பாலமுனை | 25 | 62.5 | 45 | 5,250,000 |
| தீகவாபி | 30 | 75 | 62 | 6,300,000 |
| **மொத்தம்** | **91** | **227.5** | **186** | **19,110,000** |

மூலம்: விவசாய விஸ்தரிப்பு நிலையம், பாலமுனை

மேலும் விவசாய போதனாசிரியர் கூறும்போது யாருடைய சோளச்செய்கையும் முழுமையாகப் பாதிப்படையவில்லை; பாதிப்பு 75%வரை செல்கின்றது” எனவும் குறிப்பிட்டார்.

உண்மையில் சோளச் செய்கையில் ஈடுபட்டோரில் அனேகர் ஏழை விவசாயிகள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் நிலத்தை பயிர்ச் செய்கைக்காகப் பெற்றவர்கள். நிலவாடகை, உழவுச் செலவு, விதைச் செலவு, பசளைச் செலவு, அறுவடைச் செலவு, நீர்ப்பாசனச் செலவு என பல்வேறு செலவுகளை கடன் வாங்கி செலவு செய்தவர்கள். இக்கடனை சோள அறுவடை மூலம் செலுத்தி விடலாம் என நம்பியவர்கள்.

இக்கடனை சுமார் 70%மான விவசாயிகளால் அடைக்கமுடியாமல் போயுள்ளது. பெற்ற கடனை மீளச்செலுத்தாத நிலையில் மீண்டும் கடன் கொடுப்பதற்கு வியாபாரிகள் தயாரில்லை. மறுபுறம் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணிகளுக்கான குத்தகையைக்கூட வழங்கமுடியாமல் 30%மான விவசாயிகள் திண்டாடுகின்றார்கள். இதன் காரணமாக சோள விவசாயிகள் பல்வேறு மனஉழைச்சலுக்கு உட்பட்டவர்களாகக் (70%) காணப்படுகின்றார்கள்.

படைப்புழுக்களினால் ஏற்பட்ட இப்பொருளாதார பாதிப்பு குடும்பங்களில்கூட விரிசல்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்திருக்கின்றன. கணவன் கையில் பணமில்லாது போகும்போது கணவனை நம்பி கடன்பட்ட மனைவிக்கும் கணவனுக்கும்

முரண்பாடுகள் (40%) தோன்றியிருக்கின்றன. மீண்டும் பயிர்ச்செய்கையில் ஈடுபட மூலதனமில்லை என 80%மான விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

**அட்டவணை 03: படைப்புழுக்களினால் பாதிப்படைந்த சோள அறுவடையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும்.**

| பாதிப்பு விபரம் | ஆம்(%) | இல்லை(%) |
|---|---|---|
| கடன் சுமை | 70% | 30% |
| மறு பயிர்ச்செய்கைக்கு மூலதனம் இன்மை | 80% | 20% |
| விரக்தி | 70% | 30% |
| முரண்பாடுகள் | 40% | 60% |

மூலம்: களஆய்வு, 2019

சோளச்செய்கை அறுவடை தொடர்பாக நடத்தப்பட்ட இலக்குக்குழு கலந்துரையாடலில் கேட்கப்பட்டபோது; படைப்புழுக்களினால் அறுவடை செய்யப்பட்ட சோளக்கதிர்களின் எண்ணிக்கை குறைந்ததோடு கதிர்களின் தரமும், சுவையும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

பின்வரும் இரண்டு விடயக்கலை ஆய்வுகள் சோளச்செய்கையில் எற்பட்ட பாதிப்புகளை இனங்காட்டுகின்றன.

**விடயக்கலை -01**

''அஷ்ரப் நகர்தான் எனது பூர்வீக பூமி. பிறந்தது, வளர்ந்தது, விளையாடியது எல்லாமே இங்குதான். இங்குதான் நான் ஜீவனோபாயம் செய்வதற்கான எனது பூமியும் உள்ளது. சோளம், கச்சான், பயறு போன்றவற்றை பயிர் செய்துதான் நான் எனது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றேன். இம்முறை கச்சானும் சோளமும் பயிர் செய்தேன். இது கிறவல் பூமி அதனால் பெய்த மழை நிலத்தை இறுக வைத்து கச்சானை பிடுங்க முடியாமல் செய்து விட்டது. சோளம் 03 ஏக்கர் பயிரிட்டேன். ஒரு சோள மொத்தியை கூட எடுக்க முடியாமல் புழு அழித்துவிட்டது. பயிர் வளர்த்த காலத்தில் தும்பிகள் மாதிரி சில பூச்சிகள் பாட்டம் பாட்டமாக பறந்து திரிவதை பார்த்தேன். அவை ஏதோ சில பூச்சிகள் என எண்ணி அசட்டையாக இருந்து விட்டேன். அவை இட்ட முட்டைகளே புழுக்களாகி பின் சோளத்தை தின்று முடித்திருக்கின்றன என்பதனை அதிகாரிகள் சொன்ன போதே தெரிந்து கொண்டேன். நான் ஏழை விவசாயி; இருந்தும் காசு கொடுத்து கிருமி நாசினி வாங்கித் தெளித்தேன். இருந்தும் எப்பயனும் கிட்டவில்லை. விளைச்சலும் இல்லாமல் கடனை அடைக்கும் வழியும் தெரியாமல் பிதுங்கி நிற்கின்றேன். இதுவரை எவ்வகையான நஷ்ட ஈடுகளும் எனக்குக் கிடைக்கவில்லை''.

**விடயக்கலை ஆய்வு – 02**

"நான் பாலமுனையில் வசிப்பவன். எனது நண்பர் ஒருவரின் நிலத்தில் ஒரு ஏக்கர் சோளப் பயிர் செய்து எதிர்பார்ப்போடு காத்திருந்தேன். அரைவாசியை புழுத்தின்றுவிட்டது; அரைவாசியை காப்பாற்றிவிட்டேன். புழுத்தாக்கத்திலிருந்து பாதுகாத்த சோளக்கதிர்களை விற்பனை செய்தும் உற்பத்திச் செலவைக் கூட பெற்றுக் கொள்ள முடியவில்லை. வேறு தொழில்களும் இங்கு இல்லை. கடன் மேல் கடன்களே வந்து விழுகின்றன. வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்க முடியவில்லை. பிள்ளைகளின் படிப்புச் செலவு கேள்விக் குறியில் நிற்கின்றது. நஷ்ட ஈடுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சோளப்பயிர் செய்கை சேனைப்பயிர் செய்கையாகவே இக்கிராமத்து மக்களாகிய எம்மால் செய்யப்படுகின்றது. எனது வாப்பாவின் காலத்திலும் சரி எனது காலத்திலும் சரி சோளத்தில் புழு விழுந்தாலும் அப்புழு சோளத்தின் மேல் செட்டையை அல்லது சோளத்தின் வால் பகுதியை மட்டும் தாக்குமே தவிர கதிரை தாக்காது. இது வித்தியாசமான புழு. இலை, கதிர், மீசை என சோளத்தின் எல்லாப் பகுதியையும் தின்று விட்டு கதிரின் உள்ளே படுத்து விடுகின்றது. சோளக் கதிரின் உள்ளே இருப்பதனால் கிருமி நாசினியை தெளித்தாலும் தப்பி விடுகின்றது".

**11. வியாபாரிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்**

சோளம் அறுவடைக்கு தயாராகும்போது வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடமிருந்து மொத்தமாகச் சோளக் கதிர்களை கொள்முதல் செய்து வெவ்வேறு இடங்களில் அவற்றை விற்பனை செய்வார்கள். சோளச்செய்கையில் படைப்புழுக்கள் ஏற்படுத்திய பாதிப்புகள் வியாபாரிகளையும் கணிசமான அளவு பாதித்திருக்கின்றன. மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அளவிற்கு எந்த விவசாயியிடமும் கதிர்கள் இருக்கவில்லை.

மறுபுறம் விவசாயிகளிடம் சோளக்கதிர்களைப் பெற்று அவற்றை அவியல் செய்து விற்பனை செய்யும் தெருவோர வியாபாரிகளின் பிழைப்பும் படைப்புழுக்களின் தாக்கத்தினால் பாதிப்படைந்திருக்கின்றன. அவியல் செய்யப்பட்ட பல கதிர்களில் புழுக்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு மீண்டும் அவை குப்பைகளில் வீசப்பட்ட சந்தர்ப்பங்களும் அனேகம் நிகழ்ந்துள்ளன. பின்வரும் விடயக்கலை ஆய்வு இது தொடர்பாக விளக்குகின்றது.

**விடயக்கலை ஆய்வு – 03**

"நான் அஷ்ரப் நகர் எனும் கிராமத்தில் வசிப்பவன். எனது கணவனுடன் சேர்ந்து சிறியதொரு தேநீர்க்கடை நடத்திவருகிறேன். இப்பாதையால் செல்பவர்கள் எங்கள் கடையில் தேநீர் அருந்த வருவார்கள். சோளம் அறுவடைக் காலத்தில் எமது கிராமம் களை கட்டி ஜொலிக்கும். சுற்றியிருக்கும் எல்லாக் கிராமங்களிலிருந்தும் இங்கு சோளம் வாங்கவும் எமது கடையில் அவித்து வைக்கப்பட்ட சோளக்கதிர்களை சாப்பிடவும் வருவார்கள். நல்ல வருமானமும் கிடைக்கும். மற்றும் எந்தநேரமும் சன நடமாட்டமும் இருக்கும். இம்முறை புழு இல்லாத சோளக்கதிர்களைப் பெறுவது கடினமாய்ப் போய்விட்டது. தேடிப்பிடித்து அவித்து வைத்தால், உண்பதற்கு மக்கள் விருப்பமில்லாத

சூழல் ஏற்பட்டுவிட்டது. இதனால் வருமானமும் இல்லாமல் குடும்ப வாழ்வை கொண்டு செல்ல முடியாமலும் போய்விட்டது''.

### 111. நுகர்வோர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

சோள அறுவடைக்காலம் இப்பிரதேச மக்களின் ஒருவகைக் களியாட்ட காலமாகும். பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு ஆட்பட்ட மக்கள் மன அமைதிக்காக இப்பகுதிக்கு வருவது வழக்கம். குடும்பத்தோடு சேர்ந்து வந்து சோளம் அறுவடை செய்யும் பிரதேசங்களுக்கு சென்று, சோளக்கதிர்களை அவ்விடத்திலேயே வாங்கி, சோளப்பால் வற்றிவிடுமுன் அவித்து உண்டு உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பார்கள். கூட்டம் கூட்டமாக இக்காலத்தில் மக்கள் அலைமோதுவார்கள். ஆலிம்சேனை, பாலமுனை பகுதிகளில் இந்நிகழ்வுகள் அதிகம் இடம்பெறும். படைப்புழுக்களால் சோளக்கதிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளால் இந்த உல்லாச உலா சுருங்கிவிட்டதாக இப்பிரதேச மக்களும் அங்கு விஜயம் செய்தவர்களும் குறிப்பிடுகின்றார்கள்.

### விடயக்கலை ஆய்வு – 04

''நாங்கள் மருதமுனைப் பகுதியில் வாழ்பவர்கள். இருந்தும் ஒலுவில் மற்றும் பாலமுனை பகுதிகளில் சோளம் அறுவடை செய்யும் காலத்தை பெருநாளுக்காக காத்திருப்பது போல் காத்திருப்போம். காரணம் குடும்பத்தோடு சந்தோசமாக நேரத்தைக் கழிப்பதற்கான ஏற்பாடுகள், இடங்கள் அக்கிராமங்களில்தான் அதிகம் காணப்படுகின்றன.

சோள அறுவடை காலத்தை நாம் கொண்டாட தயாராவோம். சுமார் பத்துக்கு மேற்பட்ட தடவைகள் குடும்பத்தோடும் நண்பர்களோடும் அங்கு சென்று சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு பின் சோளமும் அவித்து சாப்பிடுவோம். பிள்ளைகளும் சோளக்கதிர்களை விரும்பி சாப்பிடுவார்கள். சோளத்தை இடித்து சீனியும் சேர்த்து கஞ்சியும் செய்து குடிப்போம். அது மிக ருசியாக இருக்கும்.

பின்னர் கதிர்களை வாங்கி எடுத்து வந்து உறவினர்களுக்கும் கொடுப்போம். இதனால் குடும்ப உறவுகளும் பலமடைந்தன. சோளக் கதிர்களால் நாவுக்கு கிடைத்த சுவையும், மனதுக்கு கிடைத்த சந்தோசமும் படைப்புழுக்களால் இல்லாமல் போய்விட்டது. ஒரு திருவிழாவே இல்லாமல் போன உணர்வில் நாம் இருக்கின்றோம்''.

### முடிவுரை

பாலமுனை விவசாய விஸ்தரிப்பு நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சோளச்செய்கையில் படைப்புழுக்கள் ஏற்படுத்திய பாதிப்புகளை இவ்வாய்வு கண்டுபிடித்திருக்கின்றது. அறுவடையின் அளவு மற்றும் தரம் போன்றவற்றில் படைப்புழுக்கள் பாதிப்புகளை ஏற்படுத்தியதால் விவசாயிகள் கடன்சுமை, மூலதனம் இன்மை, விரக்தி, முரண்பாடுகள் போன்றவற்றால் பாதிப்படைந்திருக்கின்றார்கள். விவசாயிகளோடு சேர்ந்து வியாபாரிகளும் நுகர்வோர்களும்கூட பாதிப்படைந்திருக்கின்றார்கள் என இவ்வாய்வு கண்டுபிடித்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை எந்தவகையான நஷ்ட ஈடுகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்பதும் இவ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

**உசாத்துணை**


Rizan, I.L.M. (2018, November 22). Steps to control Fall Armyworm. Retrieved from http://dailynews.lk/2018/11/22/local/169131/steps-control-fall-armyworm.

Rwomushana, I., Bateman, M., Beale, T., Beseh, P., Cameron, K., Chiluba, M., Clottey, V., Davis, T., Day, R., Early, R., Godwin, J., Gonzalez-Moreno, P., Kansiime, M., Kenis, M., Makale, F., Mugambi, I., Murphy, S., Nunda. W., Phiri, N., Pratt, C., Tambo, J. (2018, October). Fall armyworm: impacts and implications for Africa. Retrieved from https://www.invasive-species.org/wp-content/uploads/sites/2/2019/02/FAW-Evidence-Note-October-2018.pdf.

Sakunthala Jayasinghe Ambanpola (2018, November 10). Farmers warned of invasive Fall Armyworm Retrieved from http://dailynews.lk/2018/11/10/local/168101/farmers-warned-invasive-fall-armyworm?page=1.

Wijerathna Madira, (2018, November 18). Beware of Fall Army Worm. Retrieved from http://www.sundayobserver.lk/2018/11/18/beware-fall-army-worm
SL crops threatened by indigenous American pest

விவசாயத் திணைக்களம், விவசாய அமைச்சு. (2018). அந்நிய படைப்புழுவைக் கட்டுப்படுத்தல் (துண்டுப் பிரசுரம்), கன்னொருவ: விவசாய அச்சக பிரிவு.

விவசாயத் திணைக்களம், விவசாய அமைச்சு. (2018). அந்நிய படைப்புழு உங்கள் பயிர்களில் உள்ளனவா? (துண்டுப் பிரசுரம்), கன்னொருவ: விவசாய அச்சக பிரிவு.

பெரியசாமி, சீரங்கன். (2019, ஜனவரி 27). படைப்புழுவை அறிந்து கொள்ளுங்கள். *தினகரன், ப. 02*

கருப்பையா ரமேஷ். (2018, டிசம்பர், 07). பஞ்சத்தை விளைவிக்கக்கூடிய படைப்புழுக்கள். Retrieved from https://www.hindutamil.in/news/environment/149507-.html

*தினகரன்* 2019, ஜனவரி, 28

*வீரகேசரி* 2019, ஜனவரி, 28